JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.13/2020 Date:07.11.2023 P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கமலேஸ் |
| தந்தை பெயர், க/பெ | : | டில்லிபாபு |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of November 2023.

எதிரி ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது நம்பர் 20, மணிகண்டன் தெரு, பொதிகை நகர், ஆவடி சென்னையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அதசாஆ.1** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் நன்கு அறிவேன். கடந்த 20.05.2018ம் தேதி எனது தந்தை சிடிஎச் ரோடு வழியாக சுமார் 10.00 மணியளவில் அவரது நம்பர் டிவிஎஸ் எகஸ்.எல் வண்டியில் ஆவடிலிருந்து திருமுல்லைவாயல் சென்றுக்கொண்டுயிருந்தபோது சிடிஎச் ரோட்டில் உள்ள முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி அருகே சென்றபோது உண்டாய் என்ற அசன்ட் கார் என் தந்தையின் மீது மோதியதில் என் தந்தை கீழே விழுந்து அடிப்பட்டுவிட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டிய வந்த வெங்கடேஷ்வரனுக்கு காயம் ஏற்பட்டது. எனது தந்தையின் மோதிய வாகன எண் TVS XL வண்டி எண் ஞாபகம் இல்லை.

2.சுமார் 10.30 மணியளவில் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். எனது தந்தையை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்துயிருப்பதாக கூறினார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று எனது தந்தையை பார்த்தேன். எனது தந்தை தலையில் பலத்த அடிப்பட்டதால் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார். அப்பொழுது பூந்தமல்லி போக்குவரத்து போலீசார் என்னை விசாரணை செய்து புகாரை பெற்றார்கள். அதன்பின்பு எனது தந்தை மறுநாள் காலையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur

JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 13/2020 Date:07.11.2023 P.W. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கடேசன் |
| தந்தை பெயர், க/பெ | : | ஸ்ரீராம் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of November 2023.

எதிரி ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது நம்பர் 13, சோழம்பேடு திருமுல்லைவாயல் சென்னையில் குடியிருந்து வருகிறேன். இறந்த டில்லிபாபு என்பவரை தெரியும். கடந்த 20.05.2018ம் தேதி நான் ஆவடியிலிருந்து எனது வீட்டிற்கு செல்வதற்காக சென்றுக்கொண்டுயிருந்தபோது அப்பொழுது டில்லிபாபு எனது இருசக்கர வாகனத்தில் லிப்ட் கேட்டு என்னிடம் வந்தார். நாங்கள் முருகப்பா பாலிடெக்னிக் அருகே சென்றுக்கொண்டுயிருந்தபோது அப்பொழுது அங்கு நின்றுக்கொண்டுயிருந்தோம், அப்பொழுது எங்கள் பின்னே வந்த உண்டாய் கார் எனது இருசக்கர வாகனத்தில் மோதியதில் நான் சுவற்று ஓரமாக விழுந்துவிட்டேன். இறந்த நபர் ரோட்டில் விழுந்துவிட்டார். அதன்பின்பு நாங்கள் மயக்கம் ஆகிவிட்டோம், எங்கள் இரு நபரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனக்கு எங்கள் வீட்டில் தகவல் தெரிவித்து என்னை வந்து பார்த்துக்கொண்டார்கள். மறுநாள் டில்லிபாபு இறந்துவிட்டதாக நான் கேள்வியுற்றேன். டி.வி.எஸ் எக்ஸ்.எல் 0313 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றபோது பின்னால் வந்த கார் இடித்துவிட்டது. என்னை கார் மோதியதில் நான் மயக்க நிலை அடைந்துவிட்டதால் நான் கார் ஓட்டுனரையோ வாகனத்தின் எண்ணையோ நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate, Ambattur